**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.305/2025**
**Prosecution Witness : LW 6 / PW 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : Mohan | | : |
| Husband Name | : Duraisamy | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Both Accused Present )**
**Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 25/06/2026**

**முதல் விசாரணை ( அரசு தரப்பு )**

**நான் தற்பொழுது** பெருமாள் கோயில் தெரு, மேட்டுப்பாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஏழுமலை மற்றும் சின்ராசுக்கு சண்டை நடந்த அன்று நான் இல்லை. ஒருநாள் சண்டை நடந்த 10 அல்லது 15 நாட்கள் கழித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள். என்னை அழைத்து விசாரித்தபோது வார்டு கவுன்சிலர் என்று நான் கூறினேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

**அரசு தரப்பில் அ.சா.6 ஐ பிறழ்சாட்சியாக பாவிக்க கோரியதன் பேரில், நீதிமன்றம் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி பின்னர் நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

சின்னராசு மற்றும் ராஜேஸ்வரி எங்கள் ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஏழுமலை தற்போது அங்கே வசிக்கவில்லை. அவர் அந்த இடத்தில் இருந்து சென்று பல வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். சின்ராசுவுக்கும் ஏழுமலைக்கும் அந்த நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவது எனக்கு தெரியும். பல நேரங்களில் நான் வார்டு மெம்பர் என்பதால் சமரசம் செய்து வைத்துள்ளேன். போலீசார் 10.09.2025ம் தேதி மதயம் 1.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் தேதி ஞாபகமில்லை.

சின்ராசு என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். அது சம்பந்தமாக என்னிடம் விசாரித்து கையொப்பம் கேட்டார்கள் என்றால் சரிதான். கடந்த 10.09.2025ம் தேதி மதியம் 1.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்து வரைபடம் வரைந்தார்கள் என்றால் சரிதான்.

ஆஜர் எதிரியிடமிருந்து சிறிய கத்தி ஒன்றை கைப்பற்றினார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு நானும் சின்ராசுவும் ஒரே ஊரில் வசித்து வருவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

| | | |
|---|---|---|
| **Case No** | : | **CC No.305/2025** |
| **Prosecution Witness** | : | **LW 5 / PW 5** |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Iwin @ Jawin | | : | |
| Husband Name | : Albert Jayaseelan | | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

**( Both Accused Present )**
**Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 25/06/2026**

**முதல் விசாரணை ( அரசு தரப்பு )**

நான் தற்பொழுது எண் 3/206, சிட்கோ நகரில் வசித்து தனியாக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார். அ.சா.2 எனது மனைவி ஆவார். கடந்த 28.08.2025 அன்று மீஞ்சூர் மேட்டுப் பாளையத்தில் உள்ள எனது மாமனாருக்கு சொந்தமான நிலத்தை அளப்பதற்காக மாமா ஏழுமலை, எனது மனைவி ஆதிஷ்மி , அவரது அக்கா சுமதி ஆகியோர் சென்றிருந்தனர். அன்று மாலை 7.00 மணியளவில் எனது மனைவிக்கு அடிபட்டதாக பொன்னேரி அரசு மருத்துவமனையில்இருந்து தகவல் கிடைத்தது. நான் சென்று கேட்டபோது தனது அப்பாவை தள்ளிவிட்டதாகவும், தடுக்க சென்ற தன்னை சின்ராசு என்பவர் வெட்டி விட்டதாகவும் எனது மனைவி கூறினார். அதன்பேரில் புகார் வாக்குமூலம் எனது மனைவியிடம் இருந்து பெறப்பட்டது. அதன்பேரில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் கூறியதன்பேரில் தான் சம்பவத்தை பற்றி தெரியும்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.305/2025**
**Prosecution Witness : LW 4 / PW 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : Nalini | | : |
| Husband Name | : Sudhakar | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Both Accused Present )**
**<u>Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of 25/06/2026</u>**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**

நான் தற்பொழுது எண் 234, பெருமாள் கோயில் தெரு, மீஞ்சூரில் வசித்து வருகிறேன். கடந்த 28.08.2025 அன்று மாலை 5.30 மணியளவில் சின்ராசு, ஆதிஷ்மி, ஏழுமலை ஆகியோர் அவர்களுடைய இடத்தில் நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் மாடு கட்டிக் கொண்டிருந்தேன். அப்போது அவர்களுக்குள் சண்டை நடந்தது. சின்ராசுவும் ஏழுமலையும் சண்டை போட்டபோது, ஏழுமலை கீழே விழுந்தார். அவரை ஆதிஷ்மி தூக்கினார். ஆஜர் எதிரி சின்ராசு ஏழுமலையை வெட்டவரும்போது ஆதிஷ்மியின் தலையில் பட்டு அவருக்கு ரத்தம் வந்தது. நான் ஓடிபோய் துணியால் தலையை அழுத்தினேன். அங்கு வந்தவர்களில் ஒருவர் அவர் கையிலிருந்த கத்தியை பிடுங்கி கொண்டார். நாங்கள் ஆதிஷ்மியை பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு)</u>**

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஏழுமலை எனது ஊரைச் சேர்ந்தவர். 3 வீடுகள் தள்ளி வசித்து வருகிறார். சம்பவம் வீட்டின் நிலத்தில் நடந்தது. நிலம் சம்பந்தமாக அடிக்கடி ஆஜர் எதிரிக்கும் ஏழுமலைக்கும் பிரச்சினை இருந்தது எனக்கு தெரியும். மோகன் மற்றும் காயத்ரி இருவரும் பஞ்சாயத்து செய்து சமாதானம் செய்து விடுவார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்தனர். அவர்களில் நான் ஒருவர் ஆவேன். ஏழுமலை எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதாலும் அவருக்கும் ஆஜர்

எதிரிகளுக்கும் இடையில் நடந்த தள்ளுமுள்ளில் ஏழுமலை தானாக விழுந்த விவரத்தை மறைத்து அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு அரி, கிரி, ஷ்மி, காயத்திரி ஆகியோர் உடன் வந்தனர். ஆதிஷ்மியின் அக்கா சுமதியும் உடன் வந்தார். புகார்தாரருக்கு முன் எதிரிகள் அளிக்க இருந்த புகாரை தடுக்கும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட பொய்யான புகாரின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மறுநாள் வந்து விசாரித்தார்கள். வாக்குமூலம் ஏதும் பெறவில்லை என்றால் சரிதான்.